**ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் - 2020**

-------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்த 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107(5) உப பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின்

தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றன எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை கிடைக்கப்பெற்றிருந்த மூலதன அளிப்புகளிலிருந்து செலவிடப்பட்ட மொத்தம் ரூபா.2,627,721,241 ஆன தொகை மூலதன அளிப்புகளின் செலவின கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக திரட்டிய நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் திரட்டிய நிதியக் கணக்கில் காணப்பட்ட செலவினங்களுக்குள் மூலதன அளிப்புகள் வருடாந்தம் கடன்தீர்பபு செய்யப்படாமை காரணமாக ரூபா.755,984,051 ஆல் பொது ஒதுக்க கணக்கு குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது-டன், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா.109,007,627 ஆன கடன்தீர்ப்பு கணக்கு வைக்கப்படாமை காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அந்த தொகையில் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் மூலதன அளிப்புகளை கணக்கு வைக்கும்போது பல்கலைக்கழகங்களை தாபிப்பதற்கு வழங்கப்படும் அரசாங்கத்தின் மூலதன அளிப்புகள், திரட்டிய நிதியத்தின் மாற்றப்படுதல் மற்றும் வருடாந்தம் சொத்துக்களை கையகப்படுத்தல் பொருட்டு வழங்கப்படும் அரசாங்கதின் மூலதன அளிப்புகளை பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கு வைத்தல் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மூலதன அளிப்புகளை செவ்வையாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா.1,594,333 ஆன செலவினம் மேற்கொள்ளாத அரசாங்கத்தின் மூலதன அளிப்புகள் நிதி நிலைமை கூற்றில் உரித்துகளின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக, நடைமுறை பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்டதால் நடைமுறை பொறுப்புகள் அந்த அளவில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | செலவினம் மேற்கொள்ளப்படாத அரசாங்கத்தின் மூலதன அளிப்புகள், நிதிக் கூற்றில் உரித்துகளின் கீழ் வெளிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரித்துகள் மற்றும் பொறுப்புகள் செவ்வையான வகைப்படுத்தலின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் செலவிடப்பட்ட மூலதன அளிப்புக் கணக்கில் ரூபா. 870,272,961 ஆன மீதியை, நிதி நிலைமைக் கூற்றில் உரித்துகளின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறையல்லாத பொறுப்புகளின் கீழ் பிற்போடப்பட்ட வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுகளில் பிற்போடப்பட்ட வருமானமாக அடையாளம் காணப்பட்டுள்ள அரசாங்கத்தின் மூலதன அளிப்புகள் ''உரித்துகளின்'' கீழ் வெளிப்படுத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரித்துகள் மற்றும் பொறுப்புகளை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் உரியவாறு வகைப்படுத்தலின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கட்டிடங்களுக்கு ஏற்புடையதாக கடந்த ஆண்டில் ஏற்பட்ட பிழையினை செவ்வையாக்கும்போது தேய்மானம் ஒதுக்கீட்டு கணக்கில் ரூபா.392,051 ஐ மட்டும் அகற்றுவதற்குப் பதிலாக வழுவாக ரூபா.1,474,857 ஐ அகற்றுதல் காரணமாக கட்டிடங்களின் தேறிய பெறுமதி ரூபா.1,082,806 ஐ குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறித்த வழுவினை தேய்மான ஒதுக்கீட்டு கணக்கில் அகற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பிழைகளை செவ்வையாக்கும் போது மீண்டும் வழுக்கள் ஏற்படாத வகையில் செவ்வையான பெறுமதிகளை அடையாளம் காணப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.3 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை ரூபா | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதி ஒழுங்குவிதிக் கோவை** | | | |
| | நிதி ஒழுங்குவிதி 571 | பல்வேறு நிருமாணிப்பு நடவடிக்கைகளின் பொருட்டு கையிருப்பாக வைத்திருந்த 02 ஆண்டுகள் விஞ்சிய ரூபா.30,097,147 ஆன 31 வைப்புகளை தீர்ப்புச் செய்யப்படவில்லை. | இறுதியான இரசீதுகளை சீராக்கப்பட்டதன் பின்னர் விடுவிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதிகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை** | | | |
| | (i) V அத்தியாயத்தின் 7.6 பந்தி | முறிகளுக்கான உடன்படிக்கைகளை மீறியதன் காரணமாக 06 ஆசிரியர் -ளிடமிருந்து மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா.ரூ.21,577,658 ஆன | 05 அசிரியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 13,266,150 ஐ இதுவரை அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகை அறவிடு- | முறிகளுக்கான உடன்படிக்கைகளை மீறுவோருக்கு ஏற்புடையதாக துரிதமாக அறவிடுவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொ- |

| | | | |
|---|---|---|---|
| | தொகை பல்கலைக்கழகத்திடம் அறவிட வேண்டியிருந்தது. | வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ள்ளுதல் வேண்டும். |
| (ii) VII அத்தியாயம் 4.1 பந்தி | 2017 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாக பல்கலைக்கழகத்தின் பணியாற்றொகுதியில் 390 பேர் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி அல்லது திறைசேரியின் இணக்கம் பெற்றுக்கொள்ளாது, வீட்டு வாடகையாக ரூபா.40,580,180 ஐ செலுத்தப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகம் மூலம் வாடகைக்கு எடுக்கப்பட்ட பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ள வீடுகள் பணியாற்றொகுதியினரின் விடுதிகளாக பயன்படுத்தியதுடன், அதன்போது பணியாற்றொகுதியினரின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக விடுதி வசதிகள் வழங்குவதற்கு இயலாமையால் தற்போதுள்ள வீடுகளுக்கு வாடகை செலுத்துவதன் மூலம் பணியாற்றொகுதியினரின் நலன்புரி வசதிகளை மேற்கொள்ளப்பட்டது. | பல்கலைக்கழகத்தின் தாபன விதிக் கோவை பிரகாரம், முறையான அனுமதியின்றி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதலாகாது. |
| (இ) **2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கை** **------------------------** | | | |
| (i) 9.1 பந்தி | (i) உபநிமித்தக் கட்டுநிதி பதவிநிலை தரத்திலான அலுவலர்களுக்கு மட்டும் பெற்றுக்கொள்ள முடியுமாயினும், அதற்கு இணங்காத வகையில் 87 சந்தர்ப்பங்களில் பதவிநிலையல்லாத அலுவலர்களுக்கு மொத்தம்.ரூபா.1,805,054 ஆன கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | ஏற்புடைய பிரிவுத் தலைவர் அல்லது பதவிநிலை அலுவலர் ஒரே முறையில் சில விசேட பணிகளை மேற்கொள்ளும்போது குறித்த பதவி நிலை அலுவர்களுக்கு ஒரே முறையில் பல கட்டுநிதிகள் செலுத்துவதை தவிர்ப்பதற்கு அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii)குறித்துரைக்கப்பட்ட மற்றும் தேவையற்ற அலுவல்களின் பொரு-ட்டு கட்டுநிதிகளை பெற்றுக்கொள்ளக் கூடாது ஆயினும், 116 சந்தர்ப்பங்களில் அவ்வாறு பெற்றுக்-கொண்ட மொத்தம் ரூபா.1,585,563 ஆன கட்டுநிதிகள் எஞ்சியி-ருந்து தீர்க்கப்பட்டிருந்-ததுடன், அது சதவீத-மாக 30% தொடக்கம் 100% வரையிலான எல்லையைக் கொண்-டிருந்தது. | தேவையான பணத்-திற்கு ஏற்புடையவாறு மதிப்பீடுகளை தயாரி-க்குமாறு பணியாற்-றொகுதியினரிடம் ஆலோசனை வழங்கி-யுள்ளதுடன், எதிர்வ-ருங் காலத்தில் செவ்-வையான மதிப்பீடு-களின் படி கட்டுநிதி-களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளப்படும். | உறுதியான மற்றும் தே-வையல்லாத அலுவல்களின் பொருட்டு கட்டுநிதி வழங்கப்படு-தலாகாது. |

## 2. நிதிநார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளபையன்

மீளாய்விற்கான ஆண்டின் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 180,829,830 ஆன பற்றாக்கறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 174,635,769 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 6,194,061 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு ஊழியர் சம்பளம் மற்றும் வேதனங்களின் அதிகரிப்பு பிரதான காரணங்களாகின.

### 2.2 மாணவர் செயலாற்றுகை

#### (அ) மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

2017/2018 மற்றும் 2018/2019 கற்கை ஆண்டில் பல்கலைக்கழகங்களிடம் புதிய மாணவர்களாக 862 பேர்களை மட்டும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், உண்மையாகவே 764 மற்றும் 791 மாணவர்களை மட்டும் ஆட்சேர்ப்புச் செய்த பின்னர், 169 மாணவர்களை கடந்த மற்றும் நடப்பாண்டில் திட்டமிட்டவாறு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதன்படி வெற்றிடங்கள் காணப்படினும் 169 மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு உரித்தற்றதாகியிருந்தது.

#### (இ) வாடகை விடுதிகள்

பல்கலைக்கழகத்தால் 2020 அம் ஆண்டில் 1251 மாணவர்கள் பொருட்டு 46 வாடகை விடுதிகளின் பொருட்டு ரூபா.52,883,400 ஐ செலவிடப்பட்டிருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 952 மாணவர்களின் பொருட்டு 38 வாடகை விடுதிகளின் பொருட்டு ரூபா.36,648,000 ஐ செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நடப்பாண்டில் மார்ச் மாதத்தின் பின்னர் கொவிட் 19 தொற்று நோய் பரவல் காரணமாக பல்கலைக்கழகத்தின் கற்கை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் ஒரு மாணவரேனும் விடுதிகளில் தங்காதிருக்கையில் நடப்பாண்டில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாடகை

விடுதிகளின் பொருட்டு ரூபா.16,235,400 ஐ மேலதிகமாக செலவிடுவதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளுதலானது பிரச்சினையுடன் கூடிய நிலைமையாகும்.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 பெப்ருவரி 10 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம், பல்கலைக்கழகம் தாபிப்பதற்கு வழங்கவிருந்த கைத்தொழில் அமைச்சிற்கு உரியதான ஹெக்டயார் 29.805 ஆன காணி 16 ஆண்டுகள் சென்ற பின்னரும் மீளாய்விற்கான ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை கையகப்படுத்தியிருக்கவில்லை. ஆயினும், இந்த காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதியில் உள்ளடங்காத காணிகளை சுவீகரிக்கும் ஆலோசகர் பதவிக்கு 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 06 ஆந் திகதி தொடக்கம் ஓய்வுபெற்ற காணி ஆணையாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்துக் கொண்டு மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரை மாதாந்த வேதனமாக மொத்தம் ரூபா.1,850,000 ஐ செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைவாக, பல்கலைக்கழகத்திடம் பொருத்தமான அலுவலரை காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளின் பொருட்டு நியமனம் செய்து கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 126 ஆவது ஆட்சி சபையின் அனுமதியின் பேரில் ஓய்வுபெற்ற காணி ஆணையாளர் ஒருவரை ஆலோசனை சேவை பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது. அவ்வாறே அவருக்கு கையளிக்கப்படும் கடமைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பணிகளை அறிக்கையிடுவதற்காக ரூபா.50,000 ஆன மாதாந்த கொடுப்பனவை வழங்குவதற்கு ஆட்சி சபையின் அனுமதியுடன் அவரிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற மாதாந்த அறிக்கையின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ள-ப்படுகிறது. | பல்கலைக்கழகத்திற்கு உரியதான காணிகளை துரிதமாக சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் ஒருவருக்கு சீனாவில் சியாமன் பல்கலைக்கழகத்தில் (Xiamen University) தத்துவமாணி பட்டம் (Ph.D) பெறு-வதற்காக 2015 ஆம் ஆண்டு செப்-தெம்பர் 25 தொடக்கம் 2018 செப்-தெம்பர் 24 ஆந் திகதி வரையிலான 03 ஆண்டு காலத்திற்கு சம்பள-த்துடன் கூடிய கற்கை லீவும், கற்கை லீவு முடிவடையும் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு யூலை 24 ஆந் திகதி வரை சம்பளமற்ற கற்கை லீவும் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆயினும், குறித்த ஆசிரியர் தத்துவமாணி பட்டத்தை பூர்த்தி செய்யாது 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி சேவைக்கு சமூகமளித்திருந்தார். 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் ஆகும் போது 02 ஆண்டுகளுக்கு அதிகமான காலப் பகுதி தத்துவமாணி பட்டம் பூர்த்தி செய்யாவிடினும், முறி உடன்படிக்கை மீறல் தொடர்பாக முறையாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தத்துவமாணி பட்டம் முடிவுறுத்தும் சான்றிதழை கையளிப்பதற்கு 2021 ஆண்டு திசெம்பர் மாதம் வரை காலம் வழங்குமாறு கோரிக்கை முன் வைத்திருந்ததுடன், அந்த கோரிக்கையினை முறிகள் அறவிடும் மீளாய்வு குழுவிடமும் முன்வைக்கப்பட்டதுடன், உரிய அறிக்கை கவனத்தில் கொண்டு 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரை தத்துவமாணி பட்டச் சான்றிதழ் பல்கலைக்-கழகத்திடம் கையளிப்பதற்கான காலம் வழங்குவதற்கு தீர்மானி-க்கப்பட்டதுடன், குறித்த திகதியிலும் அதனை கையளிப்பதற்கு முடியாது போய்விடின் முறியை மீறிய நபராக கவனத்தில் கொண்டு நடவடி-க்கை மேற்கொள்வதற்கு தீர்மா-னிக்கப்பட்டது. | உரிய காலப் பகுதியில் தத்துவமாணி பட்டம் பூர்த்தி செய்யாது முறி உடன்படிக்கை மீறிய அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2017 யூன் 09 ஆந் திகதியில் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா.253,219,360 இற்கு (பெறுமதி சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு வரியின்றி) உடன்படிக்கைகளை மேற்கொண்டு நிருமாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் 29 ஆந் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்படவிருந்த தொழில்நுட்பவியல் பீடத்திற்கான கட்டிடம், உரிய காலப் பகுதியில் முடிவுறுத்தாமை காரணமாக 06 சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்கள் மீது ஒப்பந்தக்காலம் 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேலதிக வேலைகளின் பெறுமதி ரூபா.15,543,225 ம் அடங்கலாக ரூபா.216,258,984 ஆன செலவினம் மேற்கொண்டிரு-ப்பினும் கட்டிடத்தின் வேலைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. | கைத்தொழிலின் நிருமாணிப்புகள் தற்போது இறுதி கட்டத்தை அடைந்துள்ளதுடன், பௌதீக முன்னேற்றம் 87% ஆகும். நிதிசார் முன்னேற்றம் 80% ஆவதுடன், மேலும் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளின் பெறுமதி ரூபா. மில்லியன் 52 ஆகும். குறித்த நிருமாணிப்பு பணிகளின் நிறுவனம் அரச அமைச்சுடன் இணைந்த நிறுவனமாவதாலும், தற்போது COVID -19 தொற்று நோய் நிலைமையாலும், இறக்குமதிகளை மட்டுப்படுத்தல் போன்ற காரணங்களாலும் இந்த நிறுவனத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் உள்ளதாக அவதானிக்கப்பட்டது. | உடன்படிக்கை மேற்கொண்ட காலப் பகுதியினுள், தேவையான நிருமாணிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்துவதற்கு தேவையான மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் ஒப்பந்தக்காரர்களின் நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களுக்காக மட்டும் ஒப்பந்தக் காலம் நீடிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ((ஈ)) | 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அலுவலர்களுக்காக செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை தொகை உரியவாறு கணக்கிடப்பட்டு 2019 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படாமை காரணமாக மிகை கட்டணமாக ரூபா.206,119 ஐ செலுத்த நேரிட்டிருந்தது.. | இந்த பல்கலைக்கழகத்தில் சிரேட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவியில் சேவையாற்றி ஓய்வு பெற்ற முதலாவது கல்விசாரா அலுவலர் அவர் ஆவதுடன், தற்போது ஓய்வு பெறுவதற்குள்ள ஊழியர்களுக்கான பணிக்கொடை, ஓய்வு பெறுகின்ற திகதியிலயே வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளை அறிவுறுத்தியுள்ளதுடன், ஓய்வு பெறுவதற்குள்ள ஊழியர்கள் இருப்பார்களாயின் அது தொடர்பாக முன்னராகவே சம்பளப் பிரிவு மற்றும் கொடுப்பனவு பிரிவிடம் அறிவுறுத்தப்பட்டு உரிய பணிக்கொடை தொகையினை ஒதுக்கி கொள்வதற்கான முறைமை பின்பற்றப்பட்டுள்ளது. | பணிக்கொடை தொகை உரிய காலப்பகுதிக்குள் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், தாமதங்கள் காரணமாக பல்கலைக்கழகத்திடம் செலுத்துவதற்கு நேரிட்ட மிகை கட்டணங்கள் தொடர்பாக பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மொத்தம் ரூபா.3,625,120 ஆன கடன் கொடுநர்களின் 05 மீதிகள் 01 ஆண்டு தொடக்கம் 04 ஆண்டுகள் வரை சென்றிருப்பினும், சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | பொருட்கள் மற்றும் செவை வழங்குதலை பூர்த்தி செய்யாமை, இரசீதுகளை சமர்ப்பிப்பதில் தாமதம் போன்ற காரணங்களால் பல ஆண்டுகளாக பழைய வழங்குநர்கள் 05 பேர்களின் மீதிகள் 2020.12.31 ஆந் திகதியில் கடன்கொடுநர்களின் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பொருட்கள் மற்றும் சேவைகளை உரிய விபரக் குறிப்புகளுக்கமைவாக வழங்கியதன் பின்னர்துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 பயன்பாடற்ற மற்றும் குறை பயன்பாட்டுடன் கூடிய சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

--------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான கல்வி பீடத்தின் உயிரியல் ஆய்வுகூடம் பொருட்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து ரூபா. 2,536,382 இற்கு கொள்வனவு செய்திருந்த 08 வகைகளுக்குரிய கண்ணாடி | 2016 ஆம் ஆண்டில் Science and Technology හා Mineral Resources and Technology ஆகிய கற்கைநெறிகளில் நடைமுறை செயற்பாடுகளின் பொருட்டு பயன்படுத்தும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டது.<br>2016 ஆண்டில் பாடவிதானங்களின் திருத்தங்களின் பின்னர் மேற்படி | தேவையினை சரியாக அடையாளம் காணப்பட்டு பொருட்களை கொள்வனவு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொருட்கள், (Glassware) 70 அலகுகள் 04 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கமும், உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2019 ஆம் ஆண்டில் ரூபா.10,741,101 இற்கு கொள்வனவு செய்த 04 உபகரணங்கள் ஓராண்டுக்கு அதிகமான காலப் பகுதி தொடக்கமும் கொள்வனவு செய்த பணிக்காக பயன்படுத்தாது பயனற்று இருந்தன. | பட்டப்படிப்பு கற்கைநெறிகளில் நடைமுறை செயற்பாடுகள் மாற்றமடைதல் காரணமாக, கண்ணாடி பொருட்களின் பயன்பாடு மாற்றமடைதல் இந்த இருப்புகளின் குறை பயன்பாட்டுக்கு காரணமாகியது. | |

**3.4 மனித வளங்களின் முகாமைத்துவம்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் பல்கலைக்கழகத்தின் நிரந்தர பணியாற்றொகுதியில் 86 வெற்றிடங்களும் கல்விசாரா பணியாற்றொகுதியில் 43 வெற்றிடங்களும் காணப்பட்டன. | 2020.12.31 ஆந் திகதியில் நிரந்தர கல்விசார் பணியாற்றொகுதியில் 86 வெற்றிடங்கள் காணப்படினும், அதில் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்கள் 43 இன் பொருட்டான அனுமதி 2020.11.19 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடிதம் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது.<br>கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாற்றொகுதியில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2021 ஆம் ஆண்டு பத்திரிக்கை அறவிப்புகள் மேற்கொண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சிரேட்ட உதவி நிதியாளர், உதவி நிதியாளர் மற்றும் உதவி பதிவாளர் ஆகிய பதவிகளின் வெற்றிடங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நிரப்பப்படுகிறது. மேலும், கீழ் உபபிரிவு பதவிகளின் பொருட்டான ஆட்சேர்ப்புகள் கல்வி அமைச்சினால் நிறுத்தப்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாற்றொகுதியில் அத்தியாவசிய வெற்றிடங்களை மட்டும் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2010 ஏப்ரல் 23 ஆந் திகதிய மற்றும் 921 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய- | சிரேட்ட உதவி நூலகர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்கையில் 2010 ஆம் ஆண்டு | பதவிக்குரிய எல்லா தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள |

ங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை படி சிரேட்ட உதவி நூலகர் பதவிக்காக திறந்த ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளும் போது, குறித்த பதவிகளுக்கான தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பத்தாரர் ஒருவர் 2018 ஆம் ஆண்டு யூலை 25 ஆந் திகதி பதில் கடமையாற்றும் துணைவேந்தரின் கடிதம் மூலம் முறையின்றி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 2018 ஆகஸ்ட் தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டில் யூலை மாதம் வரையிலான காலப்பகுதிக்கு ரூபா.5,418,552 ஆன சம்பளம் மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஏப்ரல் 23 ஆந் திகதிய 921 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபம் படி, தகைமைகளை கவனத்தில் கொண்டதன் பின்னர் சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தாரியை ஆட்சேர்ப்புச் செய்கின்ற சந்தர்ப்பத்தில் தத்துவமாணி பட்டப்படிப்பினை பூர்த்தி செய்திருத்தலை அடிப்படையாகக்கொண்டு, நூலகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது. அதேபோன்று தற்போது தகைமைகளை உறுதிபடுத்திக் கொள்வதற்கு தேவையான கடிதங்கள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

விண்ணப்பத்தாரிகளை முறையாக ஆட்சேர்ப்புச் செய்தல் வேண்டும்.